**யக்கலமுள்ள பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

யக்கலமுள்ள பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, யக்கலமுள்ள பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின்போது கிடைக்க வேண்டியிருந்த மாகாண சபை உதவி ரூபா 1,642,255 தொகை மற்றும் 2016 முதல் 2021 வரை பெற வேண்டிய மூலதன உதவிகளை சரி செய்வதற்குரிய ரூபா 2,181,852 தொகை மிகைகள் மற்றும் பற்றாக்குறைக் கணக்கிற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், ஆண்டிற்கான வருமானத்துடன் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியான பேரேட்டுக் கணக்கிற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ஏல விற்பனை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 185,000 தொகைக்கான டிபின் டேலர் நிலையான சொத்துக்களில் இருந்து அகற்றும் போது மூலதன செலவீட்டிற்கான அரசிறை | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | உதவுத் தொகை கணக்கிற்கு வரவு வைக்க வேண்டிய போதிலும் மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்கள் தனதாக்கலுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 222,911 தொகைக்கான செலவினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது பணமாக கிடைத்திருந்த நிர்மாண வேலை உதவி ரூபா 1,472,560 தொகை பெற வேண்டியவை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள 06 கணக்கு விடயங்களுக்கான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 105,322 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்ய வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 11,295,001 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு தேவையான விரிவான அட்டவணைகள் சமர்ப்பித்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சான்றுகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| தென் மாகாண பிரதான செயலாளரின் 2018 மே 22 திகதிய இலக்கம் SS/03/12/05 கொண்ட சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான ரூபா 2,545,000 பெறுமதியான 03 வாகனங்கள் சிதைவடைந்த நிலைமையில் காணப்பட்டதுடன் அப்புறப்படுத்தும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதிவினை சபையின் பெயரில் உரித்தாக்கிய பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | அப்புறுப்படுத்தும் அலுவல்கள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.7.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டின் போது செயலாளரினால் ஒரு நாளைக்கு வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் இடையே பிரயாணம் செய்வதற்காக தொகுதிப் போக்குவரத்து வசதிகளின்றி சபையின் வாகனத்தை பயன்படுத்தியிருந்துடன், அதன் எரிபொருளுக்காக ரூபா 468,008 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் இலக்கம் 9(3) பிரிவிற்கு இணங்க போக்குவரத்து வசதிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது என. | கிரயம் குறையுமாறு செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 20,659,104 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 9,863,449 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,335,000 | 1,698,192 | 1,584,771 | 603,310 | 1,335,000 | 971,240 | 848,570 | 489,889 |
| வாடகை | 6,474,800 | 6,133,220 | 6,054,183 | 434,469 | 6,809,400 | 4,904,386 | 6,376,431 | 355,432 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,671,500 | 4,227,140 | 4,227,140 | - | 444,500 | 543,506 | 543,506 | - |
| ஏனைய வரு மானங்கள் | 12,872,000 | 9,719,673 | 3,563,452 | 6,892,681 | 8,635,000 | 9,079,007 | 14,502,202 | 736,460 |
| | 22,353,300 | 21,778,225 | 15,429,546 | 7,930,460 | 17,223,900 | 15,498,139 | 22,270,709 | 1,581,781 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை மொத்த வருமானம் ரூபா 1,581,781 | எதிர்காலத்தில் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையாக காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு அது ரூபா 7,930,460 இற்கான நிலுவை மீதியொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | | |
| (ஆ) | 99 அறிவித்தல் பலகைகளில் இருந்து ரூபா 1,908,957 இற்கான வருமானம் ஒன்று சபை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய 35 கைத்தொழில்கள் ரூபா 157,500 தொகைக்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தி சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளும் படி அறிவிக்கப்பட்டுள்ளது என. | சுற்றாடல் தாக்கங்களை பரிசோதனை செய்து அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 வகையான மின்சாரப் பொருட்கள் இருப்பு ரூபா 35,925 தொகை பெறுமதியான 199 இருப்பு விடயங்கள் 2000 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை இடைப்பட்ட காலவீச்சில் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | அவசர சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுகின்றது என. | தேவைப்பாட்டினை கவனம் செலுத்தி கொள்வனவு செய்ய வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதி அபிவிருத்திக்காக மாவட்ட விலைக் குழுவினால் 2023 முதல் அரையாண்டிற்காக JCB இயந்திரத்தின் ஒரு மணித்தியால சேவைக்காக ரூபா 5,500 இற்கான விலை ஒன்று சமர்ப்பித்திருந்த போதிலும் JCB இயந்திர மணித்தியாலம் ஒன்றிற்காக ரூபா 6,000 விலைக்கு பெற்றுக் கொண்டிருந்தமையால் 16 நிர்மாண வேலைகளில் 646.3 இயந்திர மணித்தியாலங்களுக்காக ரூபா 323,150 | மாவட்ட விலைக் குழுவின் ரூபா 5,500 போன்ற தொகைக்கு பெக்கோ இயந்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | சபை நிதியத்திலிருந்து 19 நிர்மாண வேலைகளுக்காக வீதி அபிவிருத்தி வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்டு இருந்த வேலையின் அளவு (Volume) இற்காக மதிப்பீடு தயாரிக்கப்படாமல் இயந்திர மணித்தியாலத்தை அடிப்படையாக கொண்டு 673.5 இயந்திர மணித்தியாலங்களுக்காக ரூபா 4,016,600 தொகை முறைசாரா விதமாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மீற்றர் மணித்தியாலத்திற்காக பில் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டது என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |